
மறுபிரசுரம் — ஸ்ரீமுக வருட ஆடி அமாவாசை திதி

உ



# வில்லூன்றி புனித தீர்த்த வரலாறும் புனருத்தாரண நடவடிக்கைகளும்

சிவபூமி எனப்படும் இலங்கையின் வடபாகத்தே பல்வகைச் சிறப்புகளுடன் விளங்கும் யாழ்ப்பாண மாநகரின் மேற்குத் திசையிலே யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் கடற்கரையோரமாக அமைந்திருப்பது வில்லூன்றி க்ஷேத்திரம். ஸ்ரீ இராமபிரானால் உற்பத்தியாக்கப்பட்ட **வில்லூன்றி** எனவும், **பூர்வதனுக்கோடி** எனவும் சிறப்புப் பெயர்களைக் கொண்ட புனித தீர்த்தத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது வில்லூன்றி க்ஷேத்திரம். இக்க்ஷேத்திரத்தில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் மூர்த்திகரம் நிறைந்த கருணா சமுத்திரம். ஸ்ரீ இராமபிரானதும் எண்ணற்ற சித்தர்கள், ஞானிகளதும் பாதகமலங்கள் பட்ட இத்தலம் புண்ணிய தலம். இவ்வாறாக மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற தனிச்சிறப்பு வாய்ந்தது வில்லூன்றித் திருத்தலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ணபரம்பரைக் கதை

வில்லூன்றி தீர்த்தம் ஸ்ரீ இராமபிரானால் இராவண சங்காரத்தின் பொருட்டு இலங்கை வந்தபோது தாபிக்கப்பட்டதாகவும், அவரது கோதண்டம் ஊன்றப்பட்டபோது பிரவாகித்த தீர்த்தமெனவும் கருதப்படுகின்றது. இத்தீர்த்தத்தில் இராம சைனியங்கள் தாகசாந்தி பெற்றதாயும் இத்தீர்த்தத்தின் மருங்கில் இராமபிரான் இராவண சங்கார தோஷம் நீங்கச் சிவபூசை செய்ததாயும் அதன் ஞாபகமாக அந்நியர் ஆட்சிக் காலத்தின் முன் இத்திருக்குளமருகே ஒரு சிவாலயம் இருந்ததாகவும் பின் அது அந்நியர் ஆட்சிக்காலத்தே அழிக்கப்பட்டதாயும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சிறிது சமய சுதந்திரம் வழங்கப்பட்டபோது சிவாலயமிருந்தவிடத்தில் விநாயகர் சிலை வைத்துப் பூசிக்கப்பட்டதாயும் அவ்விநாயகர் சிலையே இன்று வில்லூன்றி வீரகத்தி விநாயகராலயத்தில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கிறாரெனவும் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. இராமபிரான் தனுஷ்கோடி வழியாக இராமேஸ்வரம் சென்று சிவ வழிபாடு செய்யுமுன் பூசித்த தலமாதலால் இவ்விடம் பூர்வதனுஷ்கோடி எனவும் வழங்கப்பட்டது. வில்லூன்றி விநாயகப் பெருமானின் மிகப்பழமை வாய்ந்த திருவூஞ்சல் திருப்பாக்களில் மூன்று இடங்களில் கடல் அலைகள் அரவணைக்க பூர்வதனுஷ்கோடியில் வீற்றிருந்து அருள்பாலிப்பவராகப் போற்றப்படுகிறது. ஆனைக் கோட்டைப் பகுதியில் சில காணிகள் ''தனுஷ்கோடி தோட்டம்'' என்ற பெயரில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

## பத்தொன்பதாம் நூற்றாண்டில்

அந்நியராட்சியில் பொலிவிழந்து கிடந்த வில்லூன்றி தீர்த்தம் அமைந்திருந்த நிலம், அக்காலத்தில் ஒல்லாந்த தேசாதிபதியுடன் நட்புரிமைகொண்டு, அச்செல்வாக்கை நல்ல முறையில் பயன்படுத்தி வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலை அமைத்த ஒப்புயர்வற்ற சைவநற்தொண்டன் ஸ்ரீமான் வைத்தியலிங்கச் செட்டியார் அவர்களால் அரசிடமிருந்து பெறப்பட்டு வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலுக்குரிய தீர்த்தமுமாக்கப்பட்டு, பிரதி வருடமும் மாசிமக தினத்தன்று வண்ணை வைத்தீஸ்வரர் அன்னை வாலாம்பிகையுடன் தீர்த்த வாரியின் பொருட்டு வில்லூன்றிக்கு எழுந்தருளும் வழமையும் ஏற்படுத்தப்பட்டது. இவ்வழமை 1940 ஆம் ஆண்டுகளில் நிறுத்தப்பட்டதாக அறியக் கிடக்கிறது. (இக்கோவில், மகாகும்பாபிஷேகத்தின் பொருட்டு பாலஸ்தாபனம் செய்து வைக்கப்பட்ட வருடம் முதல் நிறுத்தப்பட்டிருக்கலாம்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லூன்றிச் சிவாலயம் இருந்த இடத்தில் வைத்து வழிபடப் பட்டு வந்த விநாயகர் சிலை, பின்னர் ஒரு விநாயகராலயமாக வளர்ச்சியுற்றபோது (இப்போதிருக்கும் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் கோவில்) அக்கோவிலுக்குரிய தீர்த்தமாகவும் வில்லூன்றி தீர்த்தம் அமையலாயிற்று. வில்லூன்றி விநாயகப் பெருமான் சித்திரைப் பூரணை, ஆடி அமாவாசை, மகாசிவராத்திரிக்கு மறுதினம் ஆகிய மூன்று தினங்களிலும் தீர்த்தவாரியின் பொருட்டு வில்லூன்றி தீர்த்தத்திற்கு எழுந்தருளுவது வழமையாயிருந்தது. ஆலயத்தில் பேணப் பட்டுள்ள தகவல்களிலிருந்து இது 1954 ஆம் ஆண்டு வரை நடை பெற்று வந்ததாக அறியமுடிகின்றது. 1957 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தின் பொருட்டு கோவில் பாலஸ்தாபனம் செய்யப் பட்டது முதற்கொண்டு நிறுத்தப்பட்ட தீர்த்தவாரி பின் கடந்த 40 வருடங்களாக நடைபெறவில்லை.

**கற்கண்டுச் சுவாமிகள் காலம் (1920 - 1930)**

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் சுமார் 75 ஆண்டுகளுக்கு முன் வில்லூன்றியை ஞானிகளும் தவசீலர்களும் தேனை நாடி மொய்க்கும் வண்டுகள்போல் நாடிவந்த செய்தியை திரு. ச. அம்பிகைபாகன் அவர்களால் எழுதப்பட்டு கலாநிலைய பதிப்பக வெளியீடாக 1958 ஆம் ஆண்டு பிரசுரமான "இலக்கணச் சுவாமிகள் என்னும் ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் நினைவு மலர்" என்ற நூலிலுள்ள 2, 3, 4 ஆம் பக்கங்கள் பறைசாற்றி நிற்கிறது.

இவ்வாறு கற்கண்டுச் சுவாமிகள், இலக்கணச் சுவாமிகள், வித்துவான் கணேசையர் போன்ற பல தவசிரேட்டர்கள் தியானத்தில் இருந்து அருளொளி பாய்ச்சிய இடம் வில்லூன்றி. நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதலாவது குருமகாசந்நிதானம் அவர்களது தந்தையார் ஸ்ரீ செல்லையா ஐயர் அவர்கள் தினமும் வண்ணை வைத்தீஸ்வரரை வணங்கிவிட்டு வில்லூன்றி தீர்த்தக்கரையில் வந்திருந்து தியானம் செய்துபோகும் பெருவழக்கைத் தம் வாழ்நாள் முழுவதும் கொண்டிருந்தார். நல்லை ஆதீன முதலாவது குருமகா சந்நிதானம் தமது சமாதி வில்லூன்றி தீர்த்தத்திற்குச் சமீபமாக அமைய வேண்டுமென்று விரும்பினாராயினும் அது பின்னர் நிறைவேறவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சைவப்பெருமக்கள் பலரும் ஆண்டாண்டு காலமாக தமது முன்னோருக்கான அந்தியேட்டிக் கிரியைகள், அமாவாசை தர்ப்பணம் முதலிய பிதிர்க் கருமங்களை வில்லூன்றித் தீர்த்தக்கரையிலும் அதன் பக்கத்திலேயுள்ள அந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேட்டி மடங்களிலும் நிறைவேற்றி வருகின்றனர். 1955 — 65 ஆம் ஆண்டுகளில் ஆடி அமாவாசை தினங்களில் சுமார் 3000 பேர் வரை வில்லூன்றியில் அமாவாசை தர்ப்பணம் செய்து தீர்த்தமாடி வில்லூன்றி விநாயகரை வழிபட்டுச் சென்றதை இக்கட்டுரையை எழுதுபவர் பார்த்திருக்கிறார்.

## சைவ விருத்திச்சங்க காலம் (1938 — 1951)

கற்கண்டுச் சுவாமிகள், ஸ்ரீமான் மா. குமாரசாமி, ஸ்ரீமான் வல்லிபுரம் போன்ற புண்ணிய சீலர்கள் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இத்தீர்த்தத்தை உன்னத நிலையிற் பேணிப் பாது காத்து வந்தனர். இவர்களின் காலத்தின்பின், 1930 களில் வில் லூன்றி சமயாசாரங் குன்ற ஆரம்பித்தது. 1938 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதி சைவசமயிகளின் கூட்டமொன்று கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் கூட்டப்பட்டு அக்கூட்டத்தில் வில்லூன்றி புனித தீர்த்தத்தினை செவ்வனே பரிபாலித்தற் பொருட்டு ''சைவ விருத்திச் சங்கம்'' என்ற அமைப்பு உதய மாயிற்று. அதன் தலைவராக யாழ் மாநகர முன்னாள் முதல்வர் அமரர் திரு. சாம் ஏ. சபாபதி அவர்களும், செயலாளராக யாழ் மாநகர முன்னாள் உபமுதல்வரும் வில்லூன்றி விநாயகர் தேவஸ் தான முன்னாள் அறங்காவலருமாகிய திரு. சோமசுந்தரம் இராசரத்தினம் அவர்களும் சேவையாற்றினர். சங்கம் ஆரம்பத்தில் மிக உற்சாகமாகச் செயற்பட்டது. அவ்வாண்டே பெண்களுக்கென வேறாக தீர்த்தம் அகலிக்கப்பட்டுக் கட்டப்பட்டது. மடங்களெல் லாம் திருத்துவிக்கப்பட்டு காவலாளி நியமிக்கப்பட்டு மிகக் கட்டுப் பாட்டுடன் நிருவகிக்கப்பட்டது. இவைபற்றிய செய்திகளை 1938 ஆம் ஆண்டுக்கும் 1951 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைய இந்துசாதனம் பத்திரிகைகளிற் காணலாம். இக்காலகட்டத்தில் வில்லூன்றி மீண்டுமொருமுறை உன்னத நிலையடைந்திருந்தது. ஆனால் அந்தோ எம்மவரிடையேதான் ஒற்றுமையில்லையே. 1950 ஆம் ஆண்டளவில் சைவவிருத்திச் சங்கம் செயலிழந்தது.

## வில்லூன்றி விநாயகர் தேவஸ்தான நிர்வாக காலம் (1951 — 1971)

1951 ஆம் ஆண்டு தீர்த்தக் கேணியும் அதன் சுற்றாடலிலுள்ள வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் ஆதனமும் மேற்படி தேவஸ்தான அறங்காவலரால் வில்லூன்றி தேவஸ்தான அறங்காவலருக்கு குத்த கைக்கு வழங்கப்பட்டது. அவ்வாண்டில் இராமர், இலக்குவர், சீதாபிராட்டிக்கு கோவில் கட்டப்பட்டது. 1951 அம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டுவரை வில்லூன்றி தேவஸ்தான பாதுகாப்பில் தீர்த்தக்குளமும் மடங்களும் நிருவகிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1972 ஆம் ஆண்டின் பின்

1971 ஆம் ஆண்டு வில்லூன்றி விநாயகர் தேவஸ்தான அறங்காவலராயிருந்த திரு. சோமசுந்தரம் இராசரத்தினம் அவர்கள் அமரத்துவமடைந்ததைத் தொடர்ந்து வில்லூன்றி தீர்த்தம் அமைந்திருந்த ஒன்பது ஏக்கர் காணியும் வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் அறங்காவலர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இவ்விடத்தில் 1972 ஆம் ஆண்டுவரை வில்லூன்றி தீர்த்தக்கேணிச் சுற்றாடல் அமைந்திருந்த இயற்கையான அழகைப்பற்றிச் சில வரிகள் எழுதப்படவேண்டியது அவசியம். அச்சமயம் அது ஒரு அமைதி குடிகொண்ட, நாற்றிசையும் பச்சைப்பசேல் என்ற நீர்த்தன்மையுள்ள குளிர்மையான சோலை. குடிமனைகளே இல்லாமையால் எப்போதும் மிகத் துப்புரவாயமைந்திருந்தது. நீர்த்தன்மையுள்ள பூமியாதலால் எந்தக் கோடையிலும் புற்றரை பசுமையாகவே இருக்கும். சூழவுள்ள தண்ணீர் நிற்கும் பள்ளக் காணிகளில் கன்னா எனப்படும் அழகான மரங்கள் நன்கு செழித்து வளர்ந்து அதன் கீழுள்ள சேற்றை மறைத்து பச்சைப்பசேல் என என்றும் காட்சி தரும். கேணி, மடங்கள், கடல் எங்குநின்று பார்த்தாலும் இயற்கையழகை இரசிக்கக்கூடியதாயிருக்கும்.

1965 – 70 ஆம் ஆண்டுகளிலேயே இக்காணியில் ஒரு குடியேற்றத்திட்டம் ஆரம்பிப்பதற்கான பிரயத்தனங்களில் அப்போதைய அரசியல்வாதிகள் ஈடுபட்டிருந்தனர். 1972 ஆம் ஆண்டில் இக்காணியில் மக்கள் குடியேறினர். கன்னா மரங்கள் வேரோடு அகற்றப்பட்டன. குடிசைகள் அமைக்கப்பட்டன. குடியிருப்பாளர் வில்லூன்றிக் கேணியைக் குளிப்பதற்கு மட்டுமன்றித் தமது ஏனைய அழுக்குகளையும் கழுவுவதற்கும் உபயோகிக்கத் தொடங்கினர். வில்லூன்றி தீர்த்தமும் சுற்றாடலும் தனது புனிதத் தன்மையை இழந்தது. கன்னா மரங்கள் நிறைந்திருந்த காணியாதலால் குடியிருப்புக்கு கன்னாபுரம் என்ற பெயரும் சூட்டப்பட்டது. இத்தருணத்தில் அரசியல் வாதிகள் குடியிருப்பில் அக்கறை காட்டத் தொடங்கினர்.

## வில்லூன்றி தீர்த்தக்கேணி புனருத்தாரண சபை

வில்லூன்றி தீர்த்தக்கேணி தனது புனிதத்தன்மையை இழந்து நிற்பதைக்கண்டு வேதனையடைந்த சிலர் 19-05-1976ம் திகதி வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் கூடி "வில்லூன்றி தீர்த்த புனருத்தாரண சபை" என்ற அமைப்பினை ஏற்படுத்தி வில்லூன்றித் தீர்த்தமும் இதர சரித்திர, சமய முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புக்களும் சிதைந்துபோகாது பாதுகாக்க முற்பட்டனர். இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும் குடியேறிய மக்களுக்குப் போதிய மலசலகூட, நன்னீர் வசதிகள் செய்துகொடுக்கப்படும்வரை தீர்த்தக்கேணியும் அதன் சுற்றாடலும் மாசுபடுவதைத் தவிர்க்கமுடியாதிருந்தது. இதன் காரணமாக வில்லூன்றி தீர்த்தத்தினதும் அந்தியேட்டி மடங்களினதும் பாவனை முற்றாக நிறுத்தப்பட்டது. 1980ஆம் ஆண்டு கன்னாபுரம் குடியேற்றத் திட்டத்திற்குரிய காணி அரசுடைமையாக்கப்பட்டபோது, வில்லூன்றி தீர்த்தமும் இதர அமைப்புக்களும் அமைந்திருக்கும் நிலமும் தவறுதலாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அதன்விளைவாக தீர்த்தக்கேணி மூடப்படவும் இதர அமைப்புக்கள் அழிக்கப்படவும் கூடியதொரு நிலை ஏற்பட்டபோது, அக்கறையுள்ள சிலரின் கடும் எதிர்ப்பினால் அவை தவிர்க்கப்பட்டது.

1984ஆம் ஆண்டு கன்னாபுரம் வீடமைப்பு வேலைகள் முடிவுற்றபோது, மடங்களும் கேணியும் மிகவும் சீரழிந்த நிலையில் பாவனைக்குதவாதவாறு இருந்தன. குடாநாட்டில் அச்சமயம்நிலவிய அரசியல், இராணுவ சூழ்நிலைகளால் எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கமுடியவில்லை. இந்நிலையே தொடர்ந்து நீடித்தபோதிலும் 1988ஆம் ஆண்டு புனருத்தாரண சபையினர் அமரர் திரு. நாகலிங்கம் கந்தசாமி அவர்களின் உயரிய சேவையைத் தலைமையாகக் கொண்டு ரூபா 25,000/- செலவில் அந்தியேட்டி மடத்தையும் யாத்திரிகர்கள் மடத்தையும் புதுப்பித்தனர். அதனால் 1988ஆம் ஆண்டு முதல் மீண்டும் அந்தியேட்டிக் கிரியைகள் மடங்களில் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. 1989/90 ம் ஆண்டு யாழ் அரசஅதிபர் திரு. கா. மாணிக்கவாசகரின் பேருதவியால் ஐக்கியநாடுகள் தாபன நிதிஉதவியுடன் கேணிப்படிகள் ஓரளவு திருத்தியமைக்கப்பட்டன. ஆயினும் பல பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன புனித தீர்த்தமானது பல ஆண்டுகள் சேறகற்றி துப்பரவு செய்யப்படாததால் புனித நீராட முடியாத நிலையும் கடற்கரைப் பகுதி பாவனைக்குகந்த நிலையில் இல்லாதமையும் பெரும் குறைபாடுகளாயிருந்து வந்தது.

### சமூகத்தின் அவசரத் தேவைகளும் யாழ் அரச அதிபரின் நடவடிக்கையும்

கடந்த இருபது வருடகாலமும் வில்லூன்றித் தீர்த்தக்கேணி பொலிவிழந்திருந்தபோது சைவமக்கள் தமது முன்னோருக்குரிய கடமைகளை செய்யக் கீரிமலையையும் திருவடி நிலையையும் நோக்கிச் சென்றனர். இது பெரும் போக்குவரத்துச் செலவுகளையும் நேர விணாக்கத்தையும் உண்டுபண்ணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும் வேறு சம்பத்திய இடமின்மையால் மக்கள் இந்நீர் நிலைகளுக்கே செல்லவேண்டியிருந்தது. இன்று போக்குவரத்துப் பிரச்சனை மிக மோசமாகிவிட்டதுமன்றி கீரிமலை, திருவடிநிலை ஆகிய மற்றிரு புண்ணிய நீர்நிலைகளும் பொதுமக்கள் அணுக வொட்டா நிலையிலுள்ளன. இதன்காரணமாக பொதுமக்கள் எங்கு தர்ப்பணம் செய்வது, எங்கு அந்தியேட்டி செய்வது எனத்தெரியாது தடுமாறி வேதனையடைகிறார்கள். தீவுப்பகுதி மக்களின் வருகை பிரச்சினையை மேலும் பெருக்கியுள்ளது. சமயநம்பிக்கை குறைந்தவர்கள்கூட தாம் நம்பினாலென்ன நம்பாவிட்டாலென்ன தம் அன்புக்குரியவர்கள் நற்பேறடைய வேண்டுமென்ற அவாவினால் செய்யவேண்டிய கருமங்களைச் செய்துவிடவேண்டும் - நல்லமுறை யிற் செய்யவேண்டும் என விரும்புகிறார்கள். அப்படிச் செய்வதன் மூலம் மனநிம்மதி பெறுகிறார்கள். அகால மரணங்களும் அவலச் சாவுகளும் தூரவிடத்து - அணுகமுடியாவிடத்து - சாவுகளும் மலிந்துள்ள இக்காலகட்டத்தில் இந்த விருப்பம் மேலோங்கி நிற்பதைக் காண்கிறோம். மனநிம்மதி பலநோய்களைக் குணமாக்குகின்றது. ஆகவே இன்று இதற்குரிய வசதிகளைச் செய்துகொடுப்பது சமய சேவை மட்டுமன்றி சமூகசேவையுமாகின்றது. இவ்விடயங்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப் பட்டதன் விளைவாக யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்க வாசகர் அவர்கள் வில்லூன்றி புனித தீர்த்தத்தினை விரைந்து புனரமைத்தற்பொருட்டு ''வில்லூன்றி புனித தீர்த்தப் பரிபாலன சபை'' என்னுமோர் அமைப்பு ஏற்படுத்தப்படவேண்டுமென 7-7-1992 ஆம் திகதி ஆணை பிறப்பித்தார்.

வில்லூன்றித் தீர்த்தம் யாழ் குடாநாட்டுச் சைவமக்கள் அனைவருக்கும் உரியது என்பதனையும். வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் வில்லூன்றி விநாயகர் கோவில் ஆகிய கோவில்களின் தீர்த்தமென்பதையும் இத்தீர்த்தம் அமைந்திருக்கும் காணி அரச உடைமையாக்கப்பட்டிருக்கும் யதார்த்த நிலையையும் கருத்திற் கொண்டு. இப்பரிபாலன சபை வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் ஆலய பரிபாலன சபையின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவர், வில்லூன்றி விநாயகர் கோவில் தர்மபரிபாலன சபையின் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகிய மூவர், யாழ் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரால் நியமிக்கப்படும் மூவர், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் நியமிக்கப்படும் மூவர் யாழ்ப்பாண அரசாங்க அதிபரால் நியமிக்கப் படும் இந்துசமயத்தினர் மூவர் ஆகிய பதினைந்து பேரைக் கொண்டிருக்க வேண்டுமென்று பிரகடனப்படுத்தி இச்சபை இயங்கவேண்டிய வழிமுறைகள் குறித்த யாப்பு ஒன்றையும் வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்டார். இதற்கமைய வில்லூன்றித் தீர்த்தத்தைப் பாதுகாத்து வந்த வில்லூன்றி தீர்த்த புனருத்தாரண சபையானது 20-07-92 முதல் கலைக்கப்பட்டு, புதிய வில்லூன்றி புனித தீர்த்த பரிபாலன சபை அத்திகதி முதல் பதவியேற்றது.

இச்சபையின் முயற்சியால் புனித தீர்த்தமும் அதன் சுற்றாடலும் கடற்கரைப் பகுதியும் நன்னிலைப்படுத்தப்பட்டு வருகிறது. அவசர வேலைகள் யாவும் பூர்த்திசெய்யப்பட்டு சித்திரைப்பூரணை தினமான இன்று (5-5-93) வில்லூன்றி விநாயகப் பெருமான் நாற்பதாண்டு இடைவெளிக்குப்பின் வில்லூன்றி புனித தீர்த்தத்திற்கு எழுந்தருளும் நயத்தகு நிலை தோன்றியுள்ளது மனநிறைவைத் தருகிறது. இன்னும் ஏராளம் பணிகள் செய்யப்படவேண்டியுள்ளன. இவற்றிற்குப் பலலட்சம் ரூபா தேவையென மதிப்பிடப் பட்டுள்ளது. இப்பணிகளுக்கு உதவவேண்டியது சைவப் பெருமக்களதும் பொதுஸ்தாபனங்களதும் இதர சைவாலயங்களதும் கடமையாகும். எல்லோரும் வாரிவழங்கி ஒத்துழைத்து வில்லூன்றியின் சிறப்பைப் பேணுவோமாக.

எழுதி உதவியவர்: **பேராசிரியர் இ. குமாரவடிவேல்**
(செயலாளர், வில்லூன்றி புனித தீர்த்த பரிபாலனசபை)

---

பிரசுர உதவி:

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**
**யாழ்ப்பாணம்.**

---

சாந்தி அச்சகம் - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org